**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 92/2016**

Deposition of the CW1

Name : Adv. செல்வகுமார்

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 30.04.2026.

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, District Munsif Court, Eraniel in accordance with the Provision of Act XLIV of 1893.

**முதல் விசாரணை**

நான் இரணியல் வழக்கறிஞர் சங்கத்தில் பதிவு பெற்ற வழக்கறிஞராக பயிற்சி செய்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றம் IA.No.5/2025 உத்தரவின் படி நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தேன். தற்போது நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

வாதி தரப்பு விசாரணை

1. எனக்கு வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின் அடிப்படையில் பட்டிகை சொத்துக்களை அளந்து அதில் ஆக்கிரமிப்புகள் இருக்கிறாதா என்று கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்ததா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படி வடக்கு எல்கை வாதியின் அம்மாவின் மனை என்றால் சரிதான். மேற்படி வடக்கு பக்கம் உள்ள வாதியின் அம்மாவின் மனைக்கான ஆவணம் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களும் சர்வே எண் 407/22 சி -ல் அமைந்துள்ளது என்றால் சரிதான், ஆனால் ஸ்தலத்தில் குறைவான பரப்பளவு உள்ளது. சர்வே எண் 407/22 சி -ன் மொத்த விஸ்தீரணம் 12.5 ஏர்ஸ் என்றால்

சரியல்ல, வாதிகளின் ஆவணப்படி அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

2. சர்வே எண் 407/22 சி முழுவதையும் அளந்தேனா என்றால் அளந்தேன். அவ்வாறு அளந்திருந்தால் 12.5 ஏர்ஸ் பரப்பளவு இருந்திருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 12.5 ஏர்ஸ்-ல் தான் வாதிக்கு 6.250 செண்ட் பாத்தியம் என்றால் வாதி காட்டிதந்த எல்கையின் அடிப்படையில் அளந்ததில் 4.845 செண்ட் தான் உள்ளது. நான் மொத்த விஸ்தீரணமான 12.5 ஏர்ஸ் சொத்தை அளவீடு செய்து அதில் 6.250 செண்ட் சொத்தை காட்டவில்லை என்றால் சரியல்ல, குறிப்பாக கேட்கப்படவும் இல்லை. எனது அறிக்கையில் வாதியின் வீட்டின் கிழக்கு பக்கம் தெரு என்று காட்டி இருப்பது சர்வே எண் 407/22 சி ல் வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான், ஆனால் தெருவாக இருந்தது.

3. பிரதிவாதி வடக்கு பக்கம் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை நான் தெளிவாக காட்டவில்லை என்றால் சரியல்ல, எந்த ஆக்கிரமிப்பும் இல்லை. பட்டிகை சொத்தை நான் சரியாக அளக்காததால் தான் ஆக்கிரமிப்பை என்னால் கண்டறியமுடியவில்லை என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் இடைவெளி என்று நான் குறிப்பிட்டுள்ள இடம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி இடத்தை நான் தெளிவாக அளந்து காட்டவில்லை என்றால் சரியல்ல. எனது அறிக்கையில் பிரதிவாதி இடத்தையும் துல்லியமாக 4.845 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஸ்தலத்தில் இருந்ததை குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய அறிக்கை மற்றும் வரைபடம் உண்மைக்கு புறம்பானது என்றாலும் ரத்து செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**